பம்மல் பேரூராட்சியில் குடிநீர் வழங்கல்

*வினா எண் 112— திரு பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டு ஆலந்தூர்—பல்லாவரம் குடிநீர் திட்டத்தின் கீழ் பம்மல் பேரூராட்சியில் இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டும் குடிநீர் வழங்காதது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பம்மல் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பல்லாவரம் உடனடி குடிநீர் தேவை திட்டத்தின்கீழ் பம்மல் பேரூராட்சிக்கு முன்னோடி திட்டத்தின் கீழ் 3 பொது குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பம்மல் பேரூராட்சி உடனடி குடிநீர் திட்டத்திற்கென ரூ 2.87 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப் பட்டுள்ள திட்டத்தின் கீழ் 20 தெருக்களில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு அவற்றில் கைப்பம்புகள் பொருத்தப் படும். இத்திட்டம் முன்வைப்பு நிதியின் கீழ், பேரூராட்சி யிடமிருந்து நிதி கிடைத்ததும் தொடங்கப் பெறும்.

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 20 ஆழ் கிணறுகள் பம்மல் பேரூராட்சி நிதியிலிருந்து செலுத்தினால், துவக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 20 ஆழ் கிணறுகள் பொறுத்தப் பட்டு விட்டன. நான் கேட்பது, 10 ஆண்டு காலமாக இரண்டு குடிநீர் தொட்டிகள் காய்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அதே சமயத்தில் தாற்காலிக திட்டமாக ஆலந்தூர் நகராட்சிக்கும் பல்லாவரம் நகராட்சிக்கும் என்னுடைய தொகுதியிலுள்ள, முட்டுக்காடு பக்கத்திலிருந்து குடிநீர் ஆலந்தூர் நகராட்சிக்கு மட்டும் என்னுடைய தொகுதி வழியாக சென்று, அந்த தொட்டி களிலே நிரப்பப்பட்டு, தண்ணீர் வழங்கப் படுகிறது. அதே போன்று, குன்னத்தூரிலிருந்து பல்லாவரத்திற்கு, அனகாபுத்தூர், பம்மலைக் கடந்து குழாய்கள் செல்வதால், பம்மல் பேரூராட்சிக்கு இரண்டு குழாய்களில் மட்டும் தண்ணீர் விடுகிறார்கள். இந்தத் தொட்டிகள் 10 ஆண்டுகளாக காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தொட்டிகளில் தாற்காலிக அடிப்படையிலாவது தண்ணீர் ஏற்றப்படுமா? அதேபோன்று, முட்டுக்காட்டிலே யிருந்து வருகின்ற தண்ணீரை, என்னுடைய தொகுதியிலே உள்ள வேளச்சேரி, துரைப்பாக்கம், லட்சுமிபுரம், பெரியார் நகர், சுக்கன் நகர் போன்ற பகுதிகளுக்கு வழங்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஜனவரி 30]

மாண்புமிகுபேரவைத் தலைவர் : இது வேண்டுகோளாக இருக்கிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

மாண்மிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவாகளே, மாண்புமிகு உறுப்பினர் அதிகமான நேரம் பேசி விட்டதால், எதற்குப் பதில் சொல்வது என்று தெரியவில்லை. என்னால் ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், அவருடைய கேள்வியில் இரண்டு மேல்நிலை தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு, அதற்கு குடிநீர் வழங்கப்படாமல் இருப்பது உண்மையா என்று கேட்டிருக்கிறார்கள். அது உண்மை தான். காரணம், அதற்காக ரூ. 173.32 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பெரிய திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

எல்லா வேலைகளும் முடிந்த பிறகு துரதிருஷ்டவசமாக நீர் எடுத்துச் செல்லும் மெயினில் ஏற்பட்ட சில கோளாறுகள் காரணமாக அந்தத் திட்டம் முடிவு பெறவில்லை. Water was found oozing out. என்று போடப்பட்டிருக்கிறது. தண்ணீர் கசிய ஆரம்பித்து விட்டது. அவ்வளவு மோசமான குழாய்கள் முன்னாலே போடப்பட்டிருக்கின்றன. மீண்டும் ஒரு திட்டம் 708·07 லட்சம் செலவில் திட்டமிடப்பட்டு வேலை தொடங்கப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் முடிந்து தண்ணீர் வரும்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நிறைந்து தண்ணீர் கிடைக்கும்.

[முற்பகல் 9-50]

திரு. பம்மல் நல்லதம்பி: அதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விரைவில் முடிக்க ஏற்பாடு செய்கிறோம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள்.

* வினா எண் 113—திரு. உ. சுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் அபிவிருத்திக்காக 1979–ல் ஆறு கோடி ரூபாய் Crash Programme ஒன்று தீட்டியிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் எங்கெங்கு எத்தனை கிணறுகள், குழாய் கிணறுகள் தோண்டப்பட்டன?

(இ) எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?